சாட்சிகளின் வாக்குமூலம்
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 36/2025**
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
வாக்குமூலம் – வா.சா–2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லட்சுமி | மதம் | : | |
| த/க/பெ. | : | கந்தசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | 70 |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் சாட்சியம்.

---

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பு)**

1. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் புல எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் 2 1/2 ஏக்கர் ஆகும். பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. சிவகுரு டிரேடர்ஸ் யார் பெயரில் உள்ளது என்றால் வாதிகள் எங்கள் இருவர் பெயரிலும் உள்ளது.

2. சிவகுரு டிரேடர்ஸ் பதிவு செய்யப்பட்ட சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு கட்டிடம் கட்டியுள்ளோம்

என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த கட்டிடம் கட்டுவதற்கு எவ்வளவு செலவு ஆனது என்ற விவரம் எனக்கு தெரியாது. எந்த வங்கியில் கடன் வாங்கினோம் என்ற விவரம் எனது மகனுக்கு தான் தெரியும்.

3. நாங்கள் ஏற்கனவே வங்கியில் கடன் வாங்கி பணம் கட்டாமல் ஏலத்திற்கு வந்து அந்த சொத்தை எனது மருமகன் ஏலத்தில் எடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு எனது மருமகன் பெயரில் தான் உள்ளது. தாவா சொத்தில் வாடகைக்கு இருப்பதற்கு நானும், எனது மகனும் தான் வாடகை ஒப்பந்தத்தில் கையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் 05.09.2020 தேதியிட்ட வாடகை ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**05.09.2020 தேதியிட்ட வாடகை ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகின்றது**).

4. பி.வா.சா.ஆ.7 வாடகை ஒப்பந்தத்தில் குறிப்பிடடுள்ள சொத்தில் நாங்கள் எந்த தொழிலும் செய்யவில்லை என்றால் சரிதான். முதலில் வாடகை ஒப்பந்தம் பேசும் போது மாத வாடகை ரூபாய் 37,500/– என நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் எனது மகனுக்கு தான் தெரியும். எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் எனது மகன் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

5. நான் தற்போது வரை தாவா சொத்திற்கு சென்றது கிடையாது என்றால் சரிதான். நான் தாவா சொத்திற்கு எப்போதாவது வாடகை செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் பெயர் கந்தசாமி என்றால் சரிதான். சென்னிமலை கவுண்டர் மகன் கந்தசாமி என்பது எனது கணவரை தான் குறிக்கும் என்றால் சரிதான். வாடகை ஒப்பந்தம் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்க வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகை உயர்த்தி கொடுக்கப்படவேண்டும் என்று வாடகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மகன் சிவகோகுல் டிரேடர்ஸ் என்ற பெயரில் பெயின்ட் கடை வைத்துள்ளார். வாடகை

ஒப்பந்தம் செய்த நாளிலிருந்து எந்த வியாபாரமும் எனது மகன் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. நாங்கள் வாடகைக்கு வருவதற்கு முன்பே தாவா சொத்தில் மின் இணைப்பு இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் பத்தி 8ல் கடந்த 25.03.2025 அன்று தாவா சொத்திற்குள் அடியாட்களுடன் அத்துமீறி நுழைந்து பிரதிவாதிகள் மிரட்டினார்கள் என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை. என்னை மிரட்டினார்கள் என்று நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் என்னை யாரும் மிரட்டவில்லை நான் புகாரும் கொடுக்கவில்லை.

8. 31.03.2025 தேதியில் பிரதிவாதிகள், எனது மருமகன் ஆகியோர் வீட்டிற்கு வந்த போது எனது மகன் வாடகை தொகையை செலுத்தாமலும், கடனை திரும்ப செலுத்தாமலும் உள்ளதன் காரணமாக நான் வாடகை ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் எனது கணவர் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அவரிடம் கேட்டால் தான் தெரியும்.

9. தற்போது தாவா சொத்தில் பிரதிவாதிகள் கடை வைத்து நடத்தி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனக்கு வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாது என்றும், எனது மகன் தயார் செய்து கொடுத்த முதல் விசாரணை சாட்சியத்தில் கையொப்பம் செய்து, அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

KALIDASAN VEERASAMY

Digitally signed by KALIDASAN VEERASAMY
Date: 2026.08.12 18:17:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.